# கால்நடை வளர்ப்புசார் வாய்ப்புகளும் சவால்களும்: கரைத்துறைப்பற்று பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட குமுழமுனைக் கிராமத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**சிவாஹரி, சி., பாஸ்கரன், நி.**
சமூகவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
sivaharysivalingam@gmail.com

*கால்நடைவளர்ப்பு தொடர்பில் நிலவும் வாய்ப்புக்களும் சவால்களும் தொடர்பான இவ்ஆய்வானது கரைத்துறைப்பற்று பிரதேசசெயலகத்திற்குட்பட்ட குமுழமுனைக் கிராமத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாகும். இந்த ஆய்வானது கால்நடை வளர்ப்புக்கான வாய்ப்புக்கள் மற்றும் அதன் சவால்களினை மதிப்பிடுவதனை அடிப்படையாகக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இது விபரண முறையிலான ஆய்வாகும். இங்கு பண்புசார், அளவுசார் ஆய்வு முறையியல் நுட்பங்கள் இணைந்த கலப்புமுறை பயன்படுத்தப்பட்டு இவ்ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக அளவுசார் தரவுகள் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதியினைப் பயன்படுத்தி யும் பண்புசார் தரவுகளின் உதவியுடனும் மேற்கொள்ளப்பட்டது. அட்டவணை, வரைபுகள் மூலமாக அறிக்கை செய்யப்பட்டுள்ளன. இங்கு முதலாம் நிலைத்தரவுகளாக வினாக்கொத்து முறை, விடயஆய்வு, பிரதான தகவல் தருனருடனான நேர்காணல், நேர்காணல் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதியினூக தரவுப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாதிரி நுட்பமானது நோக்கம் கருதிய மாதிரி நுட்பமுறை மூலமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட குமுழமுனைக் கிராம கால்நடை வளர்ப்போரினை அடிப்படையாகக் கொண்ட மாதிரி எடுப்பாக அமைகின்றது. இங்கு 50பேர் நோக்கம் கருதிய மாதிரி எடுப்பினைப் பயன்படுத்தி ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டனர். விடயஆய்வும், தகவல் வழங்குனருடனான நேர்காணலும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதன்படி நுகர்வோர் கோட்பாடு, சூழலியல் கோட்பாடு, சமூக வலைப்பின்னல் கோட்பாடு சமூக வலுவூட்டல் கோட்பாடு என்பன மூலமும் விளக்கியிருப்பதானது ஆய்வுடன் பொருத்தப்பாடுடையதாகக் காணப்படுகின்றது. எனவே இவ்ஆய்வுடன் இக்கோட் பாடுகளும் ஒத்ததன்மையைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஆய்வு முடிபுகளின் படி கால்நடைவளர்ப்பில் 82% ஆண்களாகவும் 18% பெண்களாகவும் ஈடுபடுகின்றனர். தொழில் நிலையினை பார்க்கும்போது கால்நடைவளர்ப்பினை பிரதானமாக 82% ஆனவர்கள் மேற் கொள்வதுடன் 18% ஆனவர்கள் விவசாயத்துடன் இணைந்து உபதொழிலாக மேற்கொள் கின்றனர். கால்நடைவளர்ப்பிலே அதிகமான அளவில் 80% ஆக மாடுகளும், 10% அளவில் கோழிகளும், 10% அளவில் ஆடுகளும் வளர்க்கப்படுகின்றது. இங்கு அதிகமான அளவில் பொருளாதார சவாலானது பிரதானமாக உள்ளது. எனவே கால்நடை வளர்ப்போரின் சவால் களைக் குறைப்பதற்கு அரசாங்கத்தினதும், சமூகத்தினதும் அதிகப்படியான பங்குபற்றல் அவசியமானதாகக் காணப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள்:** கால்நடைவளர்ப்பு, கால்நடைசார் உற்பத்திகள், கால்நடை மருத்துவம், பணவீக்கம், விலையேற்றம்